# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளின் வாழ்வாதார விருத்திக்குத் தொழில்சார் பயிற்சிகளின் முக்கியத்துவம்.

[1]Thuraisingam Jeyasanthini and [2]P. Godwin Phillip
[1]Discipline of Economics,
Eastern University, Sri Lanka.
[2] Department of Economics and Management,
Vavuniya Campus, University of Jaffna.

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்றுவந்த உள்நாட்டு யுத்தம் காரணமாக இளைஞர் யுவதிகள் பல்வேறு இடர்களை சந்தித்து வருகின்றனர். யுத்தத்தமானது சமூக பொருளாதார நிலையில் பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாய்வானது ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டது. இங்கு வாழும் இளைஞர் யுவதிகளுக்கு யுத்தம் முடிவுற்ற ஒரு சுமூகமான சூழ்நிலை காணப்படும் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு வாழ்வாதார செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ள நிலையில் இவர்களின் வாழ்வாதார நிலை,தொழிற் பயிற்சிகள், புனர்வாழ்வுக் கொடுப்பனவின் நிலை எவ்வாறுள்ளது, வாழ்வாதாரத்திற்கான தொழிற் பயிற்சி தொடர்பில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது.ஆய்வினை மேற்கொள்வதற்காக சமூக பொருளாதார நிலை, வாழ்வாதாரத்திற்கான தொழிற்பயிற்சிகள் மற்றும் நிதிவசதிகள், அடிப்படைநிவாரண நடவடிக்கைகள் மற்றும் புனர்வாழ்வுக் கொடுப்பனவு என நான்கு மாறிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் என்பன பெறப்பட்டுள்ளது. ஆய்வுக்காக வழங்கப்பட்ட கூற்றுத் தொடர்பாக சராசரிப் பகுப்பாய்வைப் பயன்படுத்தி ஒவ்வொரு எண்ணக்கருவுக்குமான சராசரிப் பெறுமதி கணிப்பிடப்படுகின்றது.

ஆய்வின் முடிவுகளில் சமூக பொருளாதாரக் காரணிகள்இ வாழ்வாதாரத்திற்கான தொழிற்பயிற்சிகள் மற்றும் நிதிவசதிகள், அடிப்படை நிவாரண நடவடிக்கைகள் என்பன மத்திம திருப்தியினையும் புனர்வாழ்வுக் கொடுப்பனவுகள் குறைந்த திருப்பியினையும் வெளிப்படுத்தியுள்ளதனால் இவர்களின் வாழ்வாதாரம் பின்தங்கியுள்ளமையும் வாழ்வாதாரத்தினை விருத்தி செய்வதற்கான தொழிற் பயிற்சித் தேவை அதிகமாக உள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. இதனை 2.68 என்ற வீச்சுக்குள் அமைந்திருக்கும் இடைப் பெறுமதி காட்டி நிற்கின்றது. யுத்த்தினால் பாதிக்கப்பட்ட இளைஞர் யுவதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் நாட்டில் சமூக பொருளாதார ரீதியில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துவதனால் இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் அவசியமாகும். வாழ்வாதாரத் தொழிற் பயிற்சியானது பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் ஒன்றாக அமைவதனால் பொருத்தமானதும் விருப்பமானதுமான தொழிற்பயிற்சிகளை வழங்குவதன் மூலம் இளைஞர் யுவதிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும்.